**இந்தியத் துணைத் தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**<u>ஊடக அறிக்கை</u>**

**<u>உலக யோகா நாள் 2019</u>**

யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்வி அமைச்சும் இணைந்து மேற்க்கொண்ட ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவும் 5வது உலக யோகா நாளை கொண்டாடும் முகமாகவும் இன்று (யூன் 21 வெள்ளிக்கிழமை) வடமாகாணத்தின் அனைத்து பாடசாலைகளிலும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் பங்குபற்றலுடன் யோகா நாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன.

2. இதன் விசேட நிகழ்வாக யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் காலை 7.30 மணிக்கு யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் மேதகு வடமாகாண ஆளுனர் முனைவர் சுரேன் இராகவன் மற்றும் யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் தலமையில் 1500ற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவிகள் பங்கேற்ற சிறப்பு யோகா ஆற்றுகை இடம்பெற்றது.

3. வடமாகாண சபை அவைத்தலைவர் மாண்புமிகு சீ.வீ.கே சிவஞானம், யாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், ஆளுனரின் செயலாளர் திரு இளங்கோவன், முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் முனைவர் சர்வேஸ்வரன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், இந்தியத் துணைத்தூதரக உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

4. நிகழ்வில் வரவேற்புரை வழங்கிய யாழ் இந்தியத் துணைத் தூதுவர் யோகாவின் முக்கியத்துவம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்பில் குறிப்பிட்டதோடு இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அவர்களால் உலக மக்களுக்கு வழங்கப்பட்ட யோகா நாள் சிறப்பு வாழ்த்துச் செய்தியின் சாராம்சத்தினை வாசித்தளித்தார்.

5. அதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய மேதகு வடமாகாண ஆளுனர் முனைவர் சுரேன் இராகவன் அவர்கள் யோகமானது பக்த யோகம், ஞானயோகம், கர்ம யோகம் என்று வகைப்படுத்தப்படுவதாகவும் எமக்குள் இருக்கும் இறைவனை அடையாளம் காணுவதற்கு உதவும் கருவியாக யோகா காணப்படுகின்றது என்றும் மாணவர்கள் இவ் யோகாவினை முறையாகப் பயின்று பயனடைய வேண்டுமென்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சியாக யாழ் இந்தியத் துணைத் தூதுவர் கடந்த ஆண்டுகளில் நடாத்தப்பட்ட யோகா நாள் புகைப்படங்கள் உள்ளடக்கிய நூல், மற்றும் மகாத்மா காந்தியின் கட்டுரைகள் பேச்சுக்கள் ஆகியவற்றின் தொகுப்புக்கள் மற்றும் பாடல்களைக் கொண்ட இறுவட்டு ஆகியவற்றை ஆளுனரிடம் கையளித்தார்.

5. அதனைத் தொடர்ந்து மகாத்மா காந்தி கடைப்பிடித்த சைவ (மரக்கறி) உணவுக் கொள்கையினை வலியுறுத்தும் வகையில் JETWING hotel ல் நண்பகல் 12.00 மணிக்கு சைவ (மரக்கறி) உணவுத் திருவிழா இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுனர், வடமகாண சபை அவைத்தலைவர், யாழ் மாநகர சபை முதல்வர், முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் முனைவர் சர்வேஸ்வரன் , சமயத் தலைவர்கள், இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், கல்வியலாளர்கள், தூதரக உயர் அலுவலர்கள் உட்பட 80ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய அரசாங்க சித்த வைத்தியசாலை யாழ்ப்பாணத்தின் மருத்துவர் ஜெபநாமகணேசன் அவர்கள் சைவ உணவின் முக்கியத்துவம் தொடர்பான தனது கருத்துக்களைக் கூறினார்.

***

*21 யூன் 2019*